2014 ஜூலை 17]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதியில் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட துணை மின் நிலையங்கள் இந்தப் பகுதிக்குள் வருகிறதா என்று தெரியவில்லை. இருந்தாலும்கூட அந்தப் பகுதியிலும் ஆய்வுகளை மேற்கொண்டு புதியதாக, கூடுதலாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க முடியுமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

167—

பயணியர் மாளிகை

***2706—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையிலுள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையில் பழுதடைந்த நெடுஞ்சாலைத் துறையின் பயணியர் மாளிகைக்குப் பதிலாக, புதிய பயணியர் மாளிகை ரூ.30 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொடுக்கப்பட்ட இந்தக் கேள்வி இன்றைக்கு அவையிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ராயக்கோட்டையிலே ஏற்கெனவே இருந்த பயணியர் மாளிகை பழுதடைந்த நிலையில், புதிய பயணியர் மாளிகை கட்டித் தர வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை ஏற்று, தற்போது அந்தப் பயணியர் மாளிகை கட்டப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மகிழ்ச்சி.*

வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூலகிரி பெரிய ஊராட்சியாகும். பெங்களூரு-சென்னை தேசிய நெடுஞ்சாலையின் ஆறு வழிச் சாலையையொட்டியுள்ள பகுதியாகும். சூலகிரியிலே நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே பயணியர் மாளிகை ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியில் பயணியர் மாளிகை கட்டுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதேநேரத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2011–2012 ஆம் ஆண்டு 17 பயணியர் மாளிகைகளையும், 2012–2013 ஆம் ஆண்டில் 7 பயணியர் மாளிகைகளையும், 2013–2014 ஆம் ஆண்டு 8 பயணியர் மாளிகைகளையும், 2014–2015 ஆம் ஆண்டு 5 பயணியர் மாளிகைகளையும், இந்த ஆண்டையும் சேர்த்து 4 ஆண்டு காலத்திலே மொத்தம் 37 பயணியர் மாளிகைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 28 பயணியர்

2014 ஜூலை 17]

மாளிகைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4 பயணியர் மாளிகைகள் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளன. விரைவிலே அவை திறக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எந்தெந்தப் பகுதியிலே பயணியர் மாளிகை தேவையோ அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய பகுதியை ஆராய்ந்து சூழ்நிலைக்கேற்றவாறு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூலகிரி ஊராட்சி வளர்ந்து வருகின்ற ஒரு மிகப்பெரிய ஊராட்சியாகும். அந்த ஊராட்சியில் வட்டார வளர்ச்சி அலுவலகம், காவல் நிலையம், அரசு மருத்துவமனை, பதிவுத் துறை அலுவலகம், பொதுப் பணித் துறை அலுவலகம் உட்பட்ட பல்வேறு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பகுதியில் பெரிய காய்கறி மார்க்கெட் ஒன்றும் இருக்கிறது. ஆயிரக்கணக்கான வியாபாரிகள் தினமும் இங்கு வந்து செல்கிறார்கள். சென்னை–பெங்களூரு ஆறு வழிச் சாலையும் இந்தப் பகுதி வழியாகத்தான் செல்கிறது. எனவே, அதிக முக்கியத்துவம் வாய்ந்த சூலகிரியில் நெடுஞ்சாலைத் துறை சார்பாக ஒரு பயணியர் மாளிகையைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலகிரியில் ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் அங்கு பயணியர் விடுதி அமைக்க

சாத்தியக்கூறுகள் இருப்பின், அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட குளச்சலில் ஒரேயொரு அறையைக் கொண்ட பழமைவாய்ந்த ஒரு பயணியர் மாளிகை இருக்கிறது. குளச்சலில் harbour வரவிருக்கிறது. அப்பகுதி இன்னும் வளர்ந்து வரக்கூடிய பகுதியாக இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதிக்கு பயணியர் விடுதி அவசியம் தேவை. எனவே, அரசு அதனை விரிவுபடுத்தி, ஐந்து அறைகள் கொண்ட பயணியர் மாளிகையாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளச்சல் பகுதியில் பழமைவாய்ந்த பயணியர் மாளிகை இருப்பதாகவும், அதை விரிவுபடுத்தி அப்பகுதியில் ஒரு புதிய பயணியர் மாளிகை கட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கையினையும் வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் தங்கும் விடுதிகள் போதுமான அளவிற்கு இல்லை என்றால், குளச்சலிலே ஒரு புதிய பயணியர் மாளிகை கட்டுவதற்கு அரசு ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அவருடைய அனுமதியைப் பெற்று, ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*